1979 நவம்பர் 2]

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2, அட்டவணை, பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவர் அவர்களே, 'தமிழ்நாடு, 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 6) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 59/1979)' நிறைவேற்றப் பெறவேண்டும். வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

5. ஒழுங்குப் பிரச்சினை.

சட்ட முன்வடிவின்மீது பேசுவதற்குப் போதிய அவகாசம் கொடுக்கப் பெறுவது குறித்து.

*** திரு. எம். ஏ. லத்தீப் :** பாயின்ட் ஆப் ஆர்டர் சார். இப்போது நாம் பல்வேறு சட்ட முன்வடிவுகளை ஆய்வுக்கு எடுத்துக்கொள்கிறோம். பொதுவாக சட்ட முன்வடிவுகளை மீதான விவாதத்தில் கலந்துகொள்ளுகின்ற உறுப்பினர்கள் கையைத் தூக்கினால் அவர்கள் பேசுவதற்கு அழைக்கப் படுவார்கள் என்ற நிலைமை இருந்தது. ஆனால் சமீபத்தில் கைதூக்கினால் போதாது, யார் யார் பேசுகிறார்கள் என்று எழுதிக் கொடுக்க வேண்டுமென்று சொல்கிற முறை சரியல்ல. அதனால்தான் கையைத் தூக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் தாங்களாகவே அப்படிக் கருதிக்கொண்டிருக்கிறீர்கள். நான் அப்படிச் சொல்லவில்லை. ஏற்கனவே சப்ளிமென்டரியிலே பேசிவிட்டதால் இதிலே அதிகமாக வேண்டாம் என்று தான் சொன்னேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : இரண்டாவதாக இந்தச் சட்ட முன்வடிவுகள் நீதி மன்றத்தின் ஆய்வுக்குப் போகும்பொழுது மேலும் விளக்கங்கள் தேவைப் பட்டால் சட்டமன்ற விவாத நடவடிக்கைகளைக் கொண்டுதான் அவர்கள் விளக்கம் பெற்றுக்கொள்கிறார்கள். பல சட்டங்கள் போதிய விவாதம் இல்லா மலேயே நிறைவேற்றப்படுகின்றன என்ற ஒரு குற்றச்சாட்டை நாம் ஏற்றுக்

கொள்ளக்கூடிய நிலையிலே இருக்கிறோம். ஆகவே, சட்டங்களை இயற்றும் நேரத்தில், விருப்பமுள்ள உறுப்பினர்கள் பேசுவதற்குப் போதிய வாய்ப்புக் கொடுத்து நிறைவேற்றுவதுதான் முறையாக இருக்கும். நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவில் பேச விரும்பினேன். நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவாயிற்றே, எனவே பேச வாய்ப்பளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். ஆனால், நீங்கள் நேரத்தை உத்தேசித்து என்னைக் கேட்டுக் கொண்டதால் உட்கார்ந்து விட்டேன். இந்தச் சட்ட முன்வடிவுகளின் மீதாவது விவாதத்திற்குப் போதிய வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. லத்தீப் அவர்களுக்கு இருக்கின்ற உணர்வைப்போல் 235 உறுப்பினர்களுக்கும் இருப்பதை நானும் உணர்கிறேன். ஆனால் இப்படி சட்ட முன்வடிவுகளை எடுத்துக்கொள்ளும்பொழுது நம்முடைய அவையிலே பாரம்பரியமாக ஏற்றுக்கொண்டிருப்பது, அந்தந்தக் கட்சிக்கு ஒருவர், சுமார் இரண்டு மூன்று நிமிடங்களில் கருத்துக்களைக் கூறி நிறைவேற்றுவது என்பதாகும். ஒரேயொரு சட்ட முன்வடிவை வைத்துக்கொண்டு இன்றைக்கெல்லாம் பேசலாம். ஆனால் நடைமுறையிலே பார்த்தால் அவ்வாறு செய்வது எல்லாவற்றையும் முடிக்க முடியாது என்பதால் விரும்பினால் அதைப்பற்றி ஒவ்வொரு கட்சியிலேயும் உள்ளவர்கள் தங்கள் கருத்துக்களைச் சுருக்கமாகச் சொல்ல வாய்ப்பளிக்கப்படுகிறது அல்லது கையைத் தூக்கினால் அழைப்போம். எனவேதான் நான் அதிலே மட்டும் கேட்டுக்கொண்டேனே தவிர, கூடவே கூடாது என்று சொல்லவில்லை. ஏற்கனவே பேசி விட்டார்கள், நேரம் இல்லை என்பதற்காகத்தான் சொன்னேன். இப்பொழுது திரு. சுப்பு அவர்கள் பேசினார்கள், அதை நான் அனுமதித்தேன். திரு. லத்தீப் அவர்கள் அவையின் நேரத்தைக் கருதி நான் சொன்னதை ஏற்றுக்கொண்டு ஒத்துழைப்புக் கொடுத்தார்கள், அதற்கு நன்றி.

3. அரசினர் சட்ட முன்வடிவுகள் (தொடர்ச்சி).

(ஈ) சென்னை மாநகரக் காவல் (திருத்த) சட்ட முன்வடிவு 1979.

THE HON. THIRU K. NARAYANASWAMY : Mr. Speaker, Sir, I beg to move that the Madras City Police (Amendment) Bill, 1979 * (L.A. Bill No. 43 of 1979) be taken into consideration.

Under Section 77 of the Madras City Police Act, 1888 (Tamil Nadu Act III of 1888), the Commissioner of Police is empowered to levy such fee not exceeding twenty rupees as may from time to

---

* 1979 அக்டோபர் 27 ஆம் தேதி யிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் அச்சிடப்பெற்றுள்ளது.